28th March 1961]

(இ) எவ்வளவு காலமாக இந்தக் கையாடல் நடைபெற்று வருகின்றது ?

(உ) அதுபற்றி எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) It is alleged that there has been misappropriation of funds in the Co-operative Society.

(இ) & (உ) The matter is under investigation by the Police.

Agencies for Welfare Works (grants)

* 1139 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state when there is a Government Department for the welfare of women and children why the Government are giving grants to other semi-Government and voluntary agencies for welfare work?

THE HON. SRI C. SUBRAMANIAM : The State Government have always recognised the role which voluntary agencies have to play in Social Welfare Work, including the welfare of women and children. The Government, therefore, consider that the existence of a Government Department of Women's Welfare does not render it unnecessary to make Government grants available to such agencies.

SRI K. VINAYAKAM : Do the Government take any particular care to scrutinize the balance sheet or how the aid which is given to these private agencies and to some Government agencies are spent, whether they are usefully spent, whether there is no misappropriation or any other kind of discrepancy?

THE HON. SRI C. SUBRAMANIAM : Whenever grants are made, steps are taken to see whether they are properly utilised. From the question the hon. Member has put, I do not know whether he has got any instance in his mind where such misuse has occurred. If he brings it to the notice of the Government, it will be looked into.

State functions (religious rites)

* **1140 *Q.*—SRI S. M. ANNAMALAI :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சர்க்காரால் நடத்தப்படும் விழாக்களில் மதச் சடங்குகள் செய்யக் கூடாதென சர்க்கார் உத்திரவு பிறப்பித்துள்ளார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : No. Sir. It has not been found necessary to issue such instructions, because generally in official functions, rites and observances of any particular religion do not find a place.

[28th March 1961

SRI S. M. ANNAMALAI : சிலவிடங்களில் சர்க்காரால் நடத்தப்படும் விழாக்களில் ஒரே ஒரு மதத்தைப்பற்றிய விழாக்கள்தான் நடத்தப்படுகின்றன, அவைகளில் அமைச்சர்களும் சில சமயங்களில் பங்கெடுத்துக்கொள்கிறார்கள். அப்படி அதில் கலந்து கொள்ளும்போது பல மதத்தினர்களும் அதில் கலந்துகொள்ள முடியாமல் போகிறது. ஆகவே, சர்க்கார் அப்படிப்பட்ட விழாக்கள் நடத்தக்கூடாது என்று உத்தரவிடுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மதத்தைப்பற்றி என்ன நடக்கிறதென்று எனக்குத் தெரியவில்லை. உதாரணமாக தேங்காய் உடைத்து வைக்கிறார்கள். மதத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. அது மங்களகரமான நடவடிக்கையே தவிர எந்த மதச் சடங்கையும் அது சார்ந்ததாகச் சொல்ல முடியாது. இது போன்ற சடங்குகள் செய்யப்படுகிறதே தவிர மதச் சடங்குகள் நடப்பதாக எனக்குத் தெரியவில்லை.

SRI A. A. RASHEED : May I know whether lighting of "kuthuvilakku" is considered religious?

THE HON. SRI C. SUBRAMANIAM : அது, ஒளி கொடுப்பதற்காக. ஒளி, அறிவு ஒளியாக இருக்க வேண்டுமென்ற முறையில் அதன் சின்னமாக விளக்கு வைக்கப்படுகிறதே தவிர அதை மதச் சடங்காக கருத முடியாது.

SRI A. VEDARATHNAM : இந்த விழாக்களில் இறை வழிபாடு நடக்கிறது. அது மதச் சடங்காகக் கருதப்படுமா ? இந்தமாதிரி விஷயங்கள்கூட ஆட்சேபிக்கப்படுகிறதே.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆட்சேபணை வருவது, ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் இன்னொரு மதத்தைச் சார்ந்தவர்களைச் சொல்கிற அந்த அடிப்படையில் அல்ல. மதத்தில் நம்பிக்கையில்லாதவர்கள் கடவுள் வழிபாடு, அல்லது கடவுளைப்பற்றி பாடக்கூடாது என்று அவர்கள் மனதில் நினைத்துக்கொண்டு மற்ற மதத்தினர் பேரில் சாக்குச் சொல்லி குறைகூறுகிறவர்கள்தான் ஆங்காங்கு காணப்படுகிறார்களே தவிர இதுபோன்ற விஷயங்களை ஒரு மதத்தினர் இன்னொரு மதத்தினரை ஆட்சேபிப்பதாகத் தெரியவில்லை.

Inter-caste marriages (encouragement)

*1141 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களுக்கு சர்க்கார் உத்தியோகங்களில் முதல் சலுகை காட்ட ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI S. M. ANNAMALAI : ஜாதிமத பேதம் ஒழிக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை உடைய இந்த சர்க்கார், கலப்புத் திருமணம் செய்துகொள்வதால் ஜாதிமத பேதம் ஒழியும் என்று இச் சர்க்கார் கருதுகிறதா ? அப்படியானால் கலப்புத் திருமணம் செய்துகொள்கிறவர்களுக்கு ஏதாவது சலுகைகள் தரக்கூடாதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சர்க்கார் உத்தியோகம் கொடுப்பதன்மூலம் ஜாதி மத பேதம் ஒழியும் அல்லது கலப்புத் திருமணம் செய்துகொள்ள இதுபோன்ற தூண்டுதல் வேண்டுமென்று சொன்னால் அப்படிப்பட்ட கலப்புத் திருமணம் நடக்காமல் இருப்பதே நல்லது, உத்தியோகம் கிடைக்காவிட்டால் நடந்த திருமணம் நடக்காமலே போய்விடும். அதுபோன்ற நிலை வரலாம்.